விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 17 திங்கள் 31.05.2021 மலர் - 2, இதழ் - 55

# கொரோனா உயிரிழப்பு - குடும்பத்திற்கு ஓய்வூதியம்

கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு பிஎம் கேர்ஸ் நிதியிலிருந்து சிறப்பு திட்டம் அறிவிக்கப்பட்டதை அடுத்து, கொரோனா காரணமாக வீட்டில் சம்பாதிக்கும் உறுப்பினரை இழந்த குடும்பங்களுக்கு உதவ மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, கொரோனாவால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் மற்றும் மேம்பட்ட மற்றும் தாராளமயமாக்கப்பட்ட காப்பீட்டு இழப்பீடு ஆகியவற்றை மத்திய அரசு வழங்கும். மேலும், வேலையின்போது உயிரிழந்தவர்களுக்கான இ.எஸ்.ஐ ஓய்வூதிய திட்டத்தின் நன்மை தற்போது கொரோனா காரணமாக இறந்தவர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

அத்தகைய நபர்களின் சார்பு குடும்ப உறுப்பினர்களுக்கு தற்போதுள்ள விதிமுறைகளின்படி தொழிலாளி பெற்றுவந்த சராசரி தினசரி ஊதியத்தில் 90 சதவீதத்துக்கு சமமான தொகை ஓய்வூதியமாக கிடைக்கும். இது 24.03.2020 முதல் 24.03.2022 வரை உயிரிழப்பை சந்திக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொருந்தும். பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பு ஊழியர்களின் வைப்பு இணைக்கப்பட்ட காப்பீட்டு திட்டம் (இ.டி.எல்.ஐ) திட்டத்தின் கீழ் காப்பீட்டு சலுகைகள் மேம்படுத்தப்பட்டு தாராளமயமாக்கப்பட்டுள்ளன. மற்ற அனைத்து பயனாளிகளுடன் இணைந்து, கொரோனாவால் உயிரிழந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கும் இது உதவும். அதிகபட்ச காப்பீட்டு சலுகையின் தொகை ரூ 6 லட்சத்திலிருந்து ரூ 7 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒப்பந்த / சாதாரண தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில், ஒரே நிறுவனத்தில் தொடர்ச்சியான வேலை வாய்ப்பு கொண்டிருக்க வேண்டும் என்ற விதி தளர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அவரது மரணத்திற்கு முந்தைய கடந்த 12 மாதங்களில் வேலை மாறிய ஊழியர்களின் குடும்பங்களுக்கும்கூட இதனால் நன்மை கிடைக்கும். இது குறித்து பேசிய பிரதமர் மோடி, உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு மத்திய அரசு எப்போதும் துணையாக இருக்கும். இந்த திட்டங்கள் மூலம், அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய நிதி சிக்கல்களைத் தணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்று கூறினார்.

# செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தில் அரசியல்



கடந்த சில நாட்களாக முதல்வர் ஸ்டாலின், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்ரமணியம், தங்கம் தென்னரசு, டி.ஆர்.பாலு எல்லோரும் சொல்லும் வார்த்தை 'செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர, மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது, குத்தகைக்கு தமிழக அரசுக்குத் தர வேண்டும், அனுமதி பெற்றவுடன், உற்பத்தி துவங்கும்' என்பதுதான். ஆனால், கடந்த சில மாதங்களாக, செங்கல்பட்டு தடுப்பூசி உற்பத்தி நிலையத்தில் உற்பத்தியை துவங்க தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் கடந்த ஜனவரி 9ல் அங்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். இதனை முன்னதாகத் தெரிந்துகொண்டு ஏதோ தங்களால்தான் இது நடந்தது என்ற மாய பிம்பத்தை ஏற்படுத்த வழக்கம்போல தி.மு.க முனைகிறது. மேலும், அது மத்திய அரசுக்கு சொந்தமான ஒருங்கிணைந்த தடுப்பூசி வளாகம். அங்கு உற்பத்தியை துவங்குவது முழுக்க முழுக்க மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விவகாரம் என்பதால் விவரம் அறிந்தவர்கள் இவர்களின் பேச்சை கேட்டு நகைக்கிறார்கள்.

# முப்படை இணைப்பு சோதனை

மகாராஷ்டிரா, கடக்வசலாவில் உள்ள தேசிய ராணுவ பயிற்சி மையத்தில், 140வது பயிற்சி நிறைவு விழா நடந்தது. இதில் கடற்படைத் தளபதி கரம்பீர், 'கடந்த காலத்தை விட, தற்போது போர்ச் சூழல் மாறி வருகிறது. நிலம், கடல், வான், கணினி என பலவற்றிலும் விழிப்புடன் இருப்பது முக்கியம். இதைக் கருதியே தரைப் படை, விமானப் படை, கடற்படை ஆகிய முப்படைகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பல்வேறு சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் முப்படையினரின் கடல் பாதுகாப்பு படை அமைக்கப்பட உள்ளது. இது காலத்தின் கட்டாயம்' என தெரிவித்தார்.



# மிரட்டும் கத்தோலிக்க சிரியன் வங்கி




தமிழகத்தில் தற்போதைய கொரானா முழு ஊரடங்கு காலத்தில் யாரும் வெளியே வர முடியாது, பேருந்து, ரயில் வசதிகள் இல்லை. பலருக்கு வேலையும் இல்லை. இந்த நிலையில், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் செயல்பட்டு வரும் கத்தோலிக்க சிரியன் வங்கிக்கிளை நிர்வாகம், அதனிடம் நகைகளை அடகு வைத்து கடன் பெற்ற வாடிக்கையாளர்களை தொடர்பு கொண்டு உங்கள் நகைகளை ஏலம் விடப் போகிறோம் என்று கூறி மிரட்டி கடன் தொகையை வசூலித்து வருகிறது என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். உடனடியாக அரசு இதில் தலையிட்டு தடுக்க வேண்டும். மிரட்டும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அறநிலையத்துறை அன்னதான நிதி

ஹிந்து அறநிலையத்துறையின் கீழ் வரும் கோயில்களில் வழங்கப்படும் அன்னதான திட்டத்திற்கு நிதி கோரி தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது. கொரோனோ இரண்டாம் அலை காரணமாக ஊரடங்கு அமல் படுத்தப்பட்டிருப்பதால் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் நோயாளிகளுக்கும், பல ஆதரவற்றவர்களுக்கு இதன் மூலம் உணவு வழங்கப்படுகிறது. இந்நிலையில் அன்னதான திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த, மக்கள் நன்கொடை அளிக்கும்படி அறநிலையத்துறை கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசு அன்னதானம் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் ஹிந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஹிந்து கோவில்களின் வருமானத்திலிருந்து கொடுக்க நினைப்பது ஆட்சேபனைக்குரியது. ஹிந்து கோயில்களின் வருமானத்தை கோயில்களின் வளர்ச்சிப் பணிகளைத் தவிர அரசின் நலத்திட்டங்கள் போன்று வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என உயர் நீதிமன்றம் பலமுறை பல தீர்ப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இது நீதிமன்ற அவமதிப்பு ஆகும். மேலும், அறநிலையத்துறை சார்பில் உணவுப் பொட்டலம் வழங்கும் நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலினின் படமும், அமைச்சர் சேகர்பாபுவின் படமும் மட்டுமே அச்சிடப்பட்ட பேனர்கள் வைக்கப்படுகிறது.

எந்த கோயில் சார்பாக வழங்கப்பட்டதோ அந்த கோயிலின் படம் பேனரில் பிரதானமாக இடம் பெறுவதுதானே முறை? ஸ்டாலினும் அமைச்சரும் அவர்களது சொந்தக் காசில் வழங்குவது போல தோற்றத்தைத்தானே இது ஏற்படுத்துகிறது? ஹிந்து ஆலயங்களின் வருமானத்தை எடுத்து அரசின் திட்டங்களுக்காக செலவிடும் தமிழக அரசு, அதேபோல பிற மத வழிபாட்டுத் தலங்களின் வருமானத்தை எடுத்து செலவிட முடியுமா? என்கின்ற கேள்விகளும் இன்று பொதுமக்களிடையே எழுந்துள்ளது.



# வீரமங்கை நிகிதா கௌல்



2018ல் புல்வாமா தாக்குதலில் மேஜர் விபூதி சங்கர் தூந்தியால் வீரமரணமடைந்தார். கணவரை இழந்த சோகத்தில் இருந்து மீண்டு, அவரின் லட்சியம் காக்கும் மனைவியாக, அடுத்த சில மாதங்களிலேயே ராணுவ பயிற்சியில் சேர்ந்தார் அவரின் மனைவி நிகிதா கௌல். சென்னை ராணுவ பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றார். பயிற்சி முடித்த ராணுவ வீரர்கள், ராணுவத்தில் இணையும் நிகழ்ச்சி ஜம்மு காஷ்மீரின் உதம்பூரில் நடந்தது. இதில் நிதிகா கௌலுக்கு இந்திய ராணுவத்தின் வடக்கு கமாண்டர் ஜென்ரல் ஒய்.கே ஜோஷி ஸ்டார்கள் வழங்கி ராணுவத்தில் இணைத்தார். 'என் கணவர் கடந்து வந்த அதே பயணத்தை நான் அனுபவித்திருக்கிறேன். அவர் எப்போதும் என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருப்பார் என்று நம்புகிறேன்'' என தெரிவித்துள்ளார் அந்த வீர மங்கை நிதிகா கௌல். இவருக்கு தேசம் முழுவதும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# பழனிவேல் தியாகராஜன் குற்றச்சாட்டு



ஜி.எஸ்.டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் கூட்டத்தில் தமிழக அரசு சார்பில் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் முதல் முறையாக கலந்து கொண்டார். பின்னர், சென்னை தலைமைச் செயலகத்தில் நிருபர்களை சந்தித்து பேசிய தியாகராஜன், 'ஜி.எஸ்.டி. கவுன்சிலில் ஒரு மாநிலத்திற்கு ஒரு வாக்கு என்பது ஏற்புடையது அல்ல. ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் எங்களுடைய மறுப்பை பதிவு செய்துள்ளோம். தமிழகம் போன்ற பெரிய மாநிலங்களுக்கு பேசுவதற்கான போதிய நேரம் வழங்கப்படவில்லை. மாநிலங்களுக்கான நிலுவைத்தொகை வழங்க கடன் வாங்க உள்ளதாக மத்திய அரசு தகவல் தெரிவித்து உள்ளது. மாநில உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என ஜி.எஸ்.டி கூட்டத்தில் வலியுறுத்தினேன்' என கூறினார். ஆனால், கூட்டத்தில் பேச வந்த கருத்தை நேரடியாக சொல்லாமல், மத்திய அரசுக்கு என்று வாக்காளர்கள் இல்லை, ஒன்றிய குடிமைப் பணி என்று ஒன்று கிடையாது என்று தேவை இல்லாத விஷயங்களை எல்லாம் பேசிவிட்டு, பிறகு நேரம் போதவில்லை என குற்றம் கூறுவது முறையா என நெட்டிசன்களும் பொது மக்களும் கேள்வி கேட்டு வருகின்றனர்.

# மதிய உணவுத் திட்டப் பணம்




நாடு முழுதும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இதனால், மாணவர்களுக்கான மதிய உணவு திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மாநிலங்களை தவிர, மீதமுள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு 60 சதவீத உணவு செலவை மத்திய அரசு தருகிறது. 40 சதவீதத்தை மாநில அரசுகள் ஏற்கின்றன. ஜம்மு காஷ்மீரில் 90 சதவீத செலவை மத்திய அரசு ஏற்கிறது. அதற்கான நிதி செலவு செய்யப்படாமல் உள்ளது. மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, மதிய உணவு திட்டத்தின்கீழ் உணவுக்கு ஆகும் செலவில், மத்திய அரசின் பங்கை, மாணவர்களுக்கு வழங்கவும் அதனையும் அவர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக டெபாசிட் செய்யவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஒன்று முதல், எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்கள், 11.8 கோடி பேர் இதனால் பயனடைவர்.



# சம்பித் பாத்ரா பதிலடி

ஆஜ்தக் விவாதத்தில், காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் சுப்ரியா ஸ்ரீநடே, “டுவிட்டருக்கு உண்மையிலே பாடம் கற்பிக்க வேண்டுமென மோடி விரும்பினால், அது சுலபம். சுமார் 68 மிலியன் தொடர்பவர்களை கொண்டிருக்கும் மோடி, டுவிட்டரிலிருந்து வெளியேறினாலே போதுமே. அதை விட்டுவிட்டு ஏன் டுவிட்டரைப் பற்றி சதா குறை சொல்லிக்கொண்டுத் திரிகிறீர்கள்?” என கேட்டார். அதற்கு பதில் அளித்த பா.ஜ.க தேசிய செய்தித் தொடர்பாளர் டாக்டர். சம்பித் பாத்ரா, “அப்படிப் பார்த்தால், ராகுல் காந்திகூடத்தான் பாரதத்தில் ஜனநாயகம் செத்துவிட்டது; அராஜகம் அதிகரித்து விட்டது; மன்னராட்சி நடக்கிறது; நிர்வாகம் மோசமாயிருக்கிறது என்று அன்றாடம் புலம்பிக்கொண்டிருக்கிறார். இதற்கு பதிலாக ராகுல் நாட்டை விட்டுவிட்டு வெளியேற வேண்டியதுதானே?” என கேட்டு சுப்ரியாவை வாயை அடைத்தார்.

# வியட்நாமில் புதிய வைரஸ்



சீனாவில் கடந்த 2019ல் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ், உலகம் முழுவதும் பரவி பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. அவ்வைரஸ் உருமாற்றமும் அடைந்து பல நாடுகளில் அதிக வீரியத்துடன் பரவி வருகிறது. இந்நிலையில், வியட்நாம் நாட்டில் புதிய வகை அதிக வீரியம் கொண்ட வைரஸ் ஒன்று உருவாகி இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் அதிவேகமாக பரவுகிறது, காற்றிலும் அது பரவக்கூடியது என்றும் வியட்நாமில் சிலருக்கு நோய் தொற்றிய நிலையில் அவர்களை குணப்படுத்துவது கடினமாக இருந்ததாகவும் வியட்நாம் அமைச்சர் நுயேன்தன்லாங் தெரிவித்துள்ளார். இது குறித்து வியட்நாம் அரசு, உலக சுகாதார அமைப்பை எச்சரித்துள்ளது. அது உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் என்பது உறுதி செய்யப்பட்டால் அதுபற்றிய அறிவிப்புகளை உலக சுகாதார அமைப்பு முறையாக வெளியிடும்.

# சேவைத்துளிகள்

கொரானா இரண்டாவது அலை காரணமாக வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், தூய்மை பணியாளர்கள் போன்றவர்களுக்கு ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை போர்ட் சிட்டி உதவியுடன், தலா ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிவாரண பொருட்கள் 30 பேருக்கு சக்ஷம் மூலம் வழங்கப்பட்டது.





சக்ஷம் சார்பாக விக்கிரவாண்டி வட்டம் சிந்தாமணி, ஆதனூர், மதுரா, விநாயகபுரம் கிராமத்தில் வசித்து வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான உணவு பொருட்கள் வழங்கபபட்டன.

விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் திருச்சியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்துதல் மையம்.






மயிலாடுதுறையில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி மற்றும் நேசம் பவுண்டேஷன் சார்பாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்ள கொரோனா நோயாளிகளுக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட்டது.

தஞ்சாவூர், கந்தர்வக்கோட்டை அருகேயுள்ள கொளத்தூர், கோவில்பட்டி பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி சார்பாக அனைத்து வீடுகளுக்கும் கபசுரக் குடிநீர் வழங்கப்பட்டது.





# பின்வாங்கும் ஐ.எம்.ஏ.

நவீன அலோபதி மருத்துவத்திற்கு எதிரான தனது கருத்துக்களை வாபஸ் பெற்றால், யோகா குரு பாபா ராம்தேவ் மீதான அனைத்து காவல்நிலையப் புகார்கள், அவதூறு வழக்குகளை வாபஸ் பெற ஐ.எம்.ஏ அமைப்பு தயாராக இருப்பதாக இந்திய மருத்துவ சங்கத் தலைவர் டாக்டர் ஜான்ரோஸ் ஆஸ்டின் ஜெயலால் அறிவித்துள்ளார். முன்னதாக கிறிஸ்தவ மிஷனரிகளின் முன்னெடுப்பான ஐ.எம்.ஏ.வின் அச்சுறுத்தல்களுக்கு தலை வணங்காமல், யோகா குரு பாபா ராம்தேவ், அந்த அமைப்புக்கு எதிராக குரல் கொடுத்தார்.

மத்திய அமைச்சர் மற்றும் பலரால் அவர் தன் கருத்தை வாபஸ் பெற கோரப்பட்டார். அதனால் அவர் தன் கருத்தை வாபஸ் பெற்றார். அதன் பிறகும், 1,000 கோடி நஷ்டஈடு, மன்னிப்பு கேட்க வேண்டும் என ஐ.எம்.ஏ தொடர் சீண்டல்களில் ஈடுபட்டது. மேலும், யோகா குருவின் கருத்துக்கள் மத்திய அரசாங்கத்திற்கும் எதிரானது, மருத்துவர்களுக்கு எதிரானது என்று ஐ.எம்.ஏ தலைவர் அதனை திசைத் திருப்ப முயன்றார். யோகா குரு ஏற்கனவே தனது கருத்துக்களை தெளிவுபடுத்தியதுடன் பின்வாங்குவதற்கான மனநிலையில் இல்லை என்பதையும் தெளிவு படுத்தினார். இதைத்தவிர, சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், பக்கவிளைவுகள் இல்லா மருத்துவம், குறைந்த விலை மருத்துவம் குறித்து பாபா ராம்தேவ் கேட்ட, 25 கேள்விகளுக்கு இன்னமும் ஐ.எம்.ஏ பதில் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், டாக்டர் ஜெயலால், எப்படி தனது பதவியை மதமாற்றம் செய்யத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற செய்திகள் வெளியாகின. இதனால் ஐ.எம்.ஏவின் எஃப்.சி.ஆர்.ஏ சான்றிதழை முடக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஜெயலால் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஐ.எம்.ஏ, கோடிக்கணக்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு பல்வேறு தனியார் தயாரிப்புகளுக்கு எவ்வாறு பாக்டீரியா எதிர்ப்பு சான்றிதழ்களை வழங்குகின்றது என்பதும் வெளிச்சத்திற்கு வந்தது. இதனால், தற்போது தனது அடித்தளமே ஆட்டம் காண ஆரம்பித்ததால், இறங்கிவர ஆரம்பித்துள்ளது ஐ.எம்.ஏ.

# பயங்கரவாதிகளுடன் நெருக்கமாக ஊடகங்கள்




இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன பயங்கரவாத அமைப்புகளில் முதன்மையான ஹமாஸ் அமைப்புக்கும் இடையே சமீபத்தில் நடைபெற்ற போரில், ஹமாசின் உளவு அமைப்பின் அலுவலகம் செயல்பட்டு வந்த 13 மாடி 'அல் ஜலா' கட்டடம் குண்டு வீசி தரைமட்டமாக்கப்பட்டது. இதில் அசோசியேட்டட் பிரஸ் பத்திரிகை, அல் ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் போன்ற பல முக்கிய அலுவலகங்கள் இயங்கி வந்தன. அவர்கள் அந்த இடத்தை காலி செய்ய ஒரு மணி நேரம் வழங்கப்பட்டது. இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை (ஐடிஎஃப்) தலைவர் அவிவ் கோஹாவி, கூறுகையில், 'அல் ஜலா கோபுரம், ஹமாஸ் உளவுத்துறைக்கு சொந்தமானது. இங்கு, இராணுவத்தின் ஜி.பி.எஸ் கருவிகளுக்கு இடையூறு விளைவிக்கும், ஏவுகணையை திசைத் திருப்பும் பல்வேறு மேம்பட்ட மின்னணு போர் சாதனங்களை நிறுவி இயக்கியது ஹமாஸ். அசோசியேட்டட் பிரஸ் பத்திரிகையாளர்கள் தெரிந்தோ தெரியாமலோ, கட்டடத்தின் தரைமட்ட உணவு விடுதியில் ஹமாசின் மின்னணுத்துறை நிபுணர்களுடன் தினமும் காலை காபியைக் குடித்ததாகக் கூறியுள்ளனர்' என தெரிவித்தார். ஆனால், அசோசியேட்டட் பிரஸ், அங்கு ஹமாஸ் அமைப்பினரே இல்லை என்ற ரீதியில் இதனை மறுத்துள்ளது.

# பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மத்திய அரசு ஆதரவு



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்துள்ள குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்து முடிவு எடுப்பதற்கான கூட்டம் இன்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. அப்போது கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளுக்கு பல்வேறு நல திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகப்படுத்தினார்.

இந்த நலத்திட்டங்களை அறிவிக்குபோது பேசிய பிரதமர் மோடி, 'நாட்டின் எதிர்காலத்தை குழந்தைகளே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். வலிமை மிக்க குடிமக்களாக குழந்தைகள் உருவாவதற்கும், ஒளிமயமான எதிர்காலம் கிடைப்பதற்கும் ஆதரவளித்து, அவர்களை பாதுகாக்க தேவையான அனைத்தையும் மத்திய அரசு செய்யும். கொரோனா தொற்றால் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு பி.எம் கேர்ஸ் நிதியிலிருந்து ஆதரவளிக்கப்படும்' என பேசினார்.

இத்திட்டத்தின் மூலம் பெற்றோரை இழந்து வாடும் குழந்தைகளின் பெயரில் ரூ. 10 லட்சம் வைப்புத் தொகையை பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் பி.எம் கேர்ஸ் அளிக்கும். இந்தத் தொகை 18 வயதில் இருந்து அடுத்த ஐந்து வருடங்களுக்கு உயர் கல்வியின்போது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான உதவித் தொகையை வழங்க பயன்படுத்தப்படும். அவர்கள் 23 வயதை அடைந்தவுடன் தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த பயன்பாட்டிற்காக மொத்த பணமும் பயனாளிக்கு வழங்கப்படும்.

10 வயதுக்கு கீழுள்ள பள்ளி குழந்தைகளுக்கு அருகிலுள்ள கேந்திரிய வித்யாலயாவிலோ அல்லது தனியார் பள்ளியிலோ சேர்க்கை வழங்கப்படும். குழந்தைகள், தனியார் பள்ளியில் சேர்க்கப்பட்டால் கல்வி உரிமை சட்டத்தின் படி பி.எம் கேர்ஸில் இருந்து கட்டணம் செலுத்தப்படும். அவர்களுக்கான சீருடை, பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களுக்கான செலவையும் பிஎம் கேர்ஸ் ஏற்கும். 11 முதல் 18 வயதுடைய குழந்தைகளுக்கு சைனிக் பள்ளி, நவோதயா பள்ளி போன்ற உண்டு உறைவிட மத்திய அரசு பள்ளிகளில் குழந்தைக்கு சேர்க்கை வழங்கப்படும்.

குழந்தை ஒருவேளை பாதுகாவலர், உறவினர்கள் பராமரிப்பில் இருந்தால்அவர்கள்வீட்டின்அருகிலுள்ளகேந்திரியவித்யாலயாவிலோ அல்லது தனியார் பள்ளியிலோ சேர்க்கை வழங்கப்படும். உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்காக ஏற்கனவே உள்ள கல்விக் கடன் விதிகளின்படி பாரதத்தில் தொழிற்கல்வி, உயர் கல்வி படிப்பதற்கான கல்விக் கடன் பெறுவதற்கு ஆதரவு வழங்கப்படும். இதற்கான வட்டியை பிஎம் கேர்ஸ் செலுத்தும். இளநிலை அல்லது தொழில் கல்விக்கான கட்டணத்திற்கு சமமான உதவித் தொகை மத்திய மாநில அரசு திட்டங்களின் கீழ் வழங்கப்படும். ஏற்கனவே உள்ள உதவித் தொகை திட்டங்களுக்கு குழந்தை தகுதியாக இல்லையெனில், அதற்கு சமமான ஊக்கத்தொகையை பி.எம் கேர்ஸ் வழங்கும். மேலும் 5 லட்சம் மருத்துவ காப்பீட்டுடன் கூடிய ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயனாளிகளாக அனைத்து குழந்தைகளும் சேர்க்கப்படுவர். அவர்களுக்கு 18 வயதாகும்வரை பிரீமியம் தொகை பி.எம் கேர்ஸ் நிதியிலிருந்து செலுத்தப்படும்' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதரசி ராணி அகல்யா பாய் ஹோல்கர்



ஆளப்பிறந்தவன் ஆண்மகன்தான் என்று இருந்ததை முறியடித்து ஆண்களுக்கு இணையாகவும், அவர்களைவிட ஒருபடி மேலாகவும் நாட்டை ஆட்சி செய்ய முடியும் என்று சில பெண்ணரசிகளும் தங்கள் திறமைகளையும் காட்டி முத்திரை பதித்துள்ளனர். இவர்களில் இந்தூர் ராணி அகல்யா பாய் ஹோல்கரின் பெயர் மராட்டிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியது. இவர் மராட்டிய சாம்ராஜ்யத்தை விழிப்பூட்டி முகலாயர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு எழுச்சி தந்தவர். இவர் கொடுத்த ஆதரவில்தான் மகாஜி ஷிண்டே முன் நின்று மராட்டிய சாம்ராஜ்யத்தை சூழ்ச்சிக்காரர்களின் பிடியிலிருந்து காத்தார். இவர் சிவபெருமானின் தீவிர பக்தை. காசி விஸ்வ நாதர் கோயில் உட்பட பல கோயில்கலை நிர்மாணித்தவர், புனரமைத்தவர் இவர்.

இவரது ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட சாலைகளும் கல்விக்கூடங்களும் மருத்துவமனைகளும் இவர் செய்த பணிகளாக இன்றும் போற்றும் வண்ணம் உள்ளன. இதைத்தவிர, ‘சதுர்தாம்’ என்ற நான்கு ஈஸ்வர வழிபாட்டு இடங்களை அமைத்தது, நாற்பத்தி மூன்று தீர்த்தக் குளங்களை ஏற்படுத்தியது, துவாதசலிங்க க்ஷேத்திரங்கள் என்று 97 வகைப்பட்ட ஆலயங்களை கட்டியது. அக்கோயில்களில் அன்றாட வழிபாடுகள் நடைபெற லட்சக்கணக்கில் வாரி வழங்கியது என சொல்லிக்கொண்டே போகலாம்.

ராமநாத சுவாமிக்கும், காசி விஸ்வநாதருக்கும் அன்றாடம் காசி தீர்த்தமும், கோடி தீர்த்தமும் அபிஷேகங்களுக்கு கொண்டு சேர்ப்பித்த புண்ணியவதி இவர். இவரின் தர்பார் மண்டபம் 108 ருத்ராட்ச லிங்கம், நவமணிகளின் ஒவ்வொரு ரத்னத்திலும் கட்டை விரல் அளவு சிவலிங்கங்கள், நர்மதை நதியில் இருக்கும் பளிங்குக் கல்லைக் கொண்டு செய்யப்பட்ட பாண லிங்கங்கள் என்று அந்த மண்டபத்தை அப்படியே ஒரு ஈஸ்வர லோகமாக அமைத்தவர்.

பாரதத்தில் உள்ள 12 ஜோதிர்லிங்க கோயில்களில் 8 ஜோதிர்லிங்க கோவில்களான காசி விஸ்வநாதர் கோவில், குஜராத்திலுள்ள சோமநாதர் கோயில், ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர், உஜ்ஜயினியில் ஓம்காரேஷ்வர், கேதார்நாத் கேதாரேஸ்வர், மகாராஷ்ட்ராவிலுள்ள பீம் சங்கர் கோவில், மகாராஷ்ட்ராவிலுள்ள திரியம்புகேஷ்வர் கோவில், எல்லோரா அருகிலுள்ள கிருஷ்ணேஷ்வர் கோவில் போன்றவை இவரால், தன் சொந்த செலவில் புனரமைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ராணி அகல்யா பாய் ஹோல்கரின் பிறந்த தினம் இன்று